# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மணிமணியாக என்பது

அ) இரட்டைக்கிளவி ☐ ஆ) இணைமொழி ☐
இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ ) அடுக்குத்தொடர் ☐

2. விசயன் வருவதற்கு முன்பே, இலங்கையின் வடபகுதியில் பேரரசுகளை அமைத்தவர்கள்

அ) நாகர் ☐ ஆ) ஆரியர் ☐
இ) சிங்களவர் ☐ ஈ ) இயக்கர் ☐

3. பகுசொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மலர் ☐ ஆ) தமிழர் ☐
இ) காடு ☐ ஈ ) பணம் ☐

4. காலமழை காணாத மண்ணிலே
பாறை பிளந்து பயன் விளைவிப்பவன்

அ) மீனவன் ☐ ஆ) உழவன் ☐
இ) கொல்லன் ☐ ஈ ) காவலன் ☐

5. வினைமுற்றுகளில் காலம் காட்டுவது

அ) பகுதி ☐ ஆ) இடைநிலை ☐
இ) சந்தி ☐ ஈ ) சாரியை ☐

6. மகாவம்சம் சுட்டெரிக்கப்பட வேண்டிய நூல் என்று கூறியவர்

அ) ஈ.டபிள்யூ.அதிகாரம் ☐ ஆ) லயனல்சரத் ☐

இ) தோமசுவான்றி ☐ ஈ ) றொபேட்நொக்சு ☐

7. வாடைக்காற்று வீசுவது

அ) வடக்கிலிருந்து ☐ ஆ) தெற்கிலிருந்து ☐

இ) மேற்கிலிருந்து ☐ ஈ ) கிழக்கிலிருந்து ☐

8. மெய்முன் மெய் புணர்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மணியொலி ☐ ஆ) பாற்குடம் ☐

இ) நூலகம் ☐ ஈ ) பலாவிலை ☐

9. நித்திலம் என்பது

அ) வயல் ☐ ஆ) பொட்டு ☐

இ) செயல் ☐ ஈ ) முத்து ☐

10. விடிஞ்சிட்டுது என்ற பேச்சுவழக்குச் சொல்லின் செவ்வழக்கு

அ) விடிஞ்சுவிட்டது ☐ ஆ) விடிஞ்சிட்டது ☐

இ) விடிந்துவிட்டது ☐ ஈ ) விடுஞ்சிட்டது ☐

11. பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ) அகநானூறு ☐ ஆ) புறநானூறு ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ ) நாலடியார் ☐

12. ப்,வ் என்பன

அ) விகுதிகள் ☐ ஆ) பகுதிகள் ☐

இ) இடைநிலைகள் ☐ ஈ ) சாரியைகள் ☐

13. விளி வேற்றுமை என்பது

அ) இரண்டாம் வேற்றுமை ☐ ஆ) முதலாம் வேற்றுமை ☐

இ) மூன்றாம் வேற்றுமை ☐ ஈ ) எட்டாம் வேற்றுமை ☐

14. தமிழர் திருகோணமலையில் வாழ்ந்ததற்கான சான்று

அ) ஈமத்தாழி ☐ ஆ) கல்வெட்டு ☐

இ) எலும்புக்கூடு ☐ ஈ ) காசு ☐

15. பின்வருவனவற்றுள் மெல்லின மெய்யெழுத்து

அ) க் ☐ ஆ) ர் ☐

இ) ட் ☐ ஈ ) ண் ☐

16. ஆடினான் என்ற சொல்லின் பகுதி

அ) ஆடிய ☐ ஆ) ஆடி ☐

இ) ஆடு ☐ ஈ ) ஆன் ☐

17. இலங்கையில் மிகப்பெரிய தாழிக்காடு அமைந்துள்ள இடம்

அ) பொம்பரிப்பு ☐ ஆ) கந்தரோடை ☐

இ) அநுராதபுரம் ☐ ஈ ) பூநகரி ☐

18. தனிநாயகம் அடிகளாரால் 'தமிழர் பண்பாட்டுக்கழகம்' தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1974 ☐ ஆ) 1956 ☐

இ) 1952 ☐ ஈ ) 1976 ☐

19. தேனிசை என்பது

அ) திரிதல் ☐ ஆ) இயல்பு ☐

இ) கெடுதல் ☐ ஈ ) தோன்றல் ☐

20. பழைய கற்காலத்தில் மாந்தன் கையாண்ட முதற்கருவி

அ) கத்தி ☐ ஆ) வாள் ☐

இ) ஈட்டி ☐ ஈ ) கல் ☐

21. உள்ளக்கிடக்கை என்பது

அ) மன உணர்வு ☐ ஆ) மகிழ்ச்சி ☐

இ) துன்பம் ☐ ஈ ) அழுகை ☐

22. கங்குகரை என்ற இணைமொழித்தொடர் குறிப்பது

அ) ஏற்ற இறக்கத்தை ☐ ஆ) எல்லையை ☐

இ) முற்றுப்பெறாமையை ☐ ஈ ) சிறிது பெரிதை ☐

23. உலகின் முதல் மாந்தன் தோன்றிய இடம்

அ) குமரிக்கண்டம் ☐ ஆ) ஐரோப்பா ☐

இ) வடஅமெரிக்கா ☐ ஈ ) சிந்துவெளி ☐

24. 'பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்' ஏழையாளன்

அ) நாரை ☐ ஆ) காவலர் ☐

இ) பாண்டியன் ☐ ஈ ) புலவர் ☐

25. நெல் + பயிர்

அ) நெல்ப்பயிர் ☐ ஆ) நெல்பயிர் ☐

இ) நெப்பயிர் ☐ ஈ ) நெற்பயிர் ☐

26. வீரமகன் போர்க்களத்தில் ________ அம்பு தாங்கி வீழ்ந்து கிடந்தான்.

அ) முதுகில் ☐ ஆ) மார்பில் ☐

இ) கழுத்தில் ☐ ஈ) வயிற்றில் ☐

27. இலக்கியா கல்வியிற் சாலச் சிறந்தவள். இச் சொல்லியத்தில் இடம் பெற்ற உரிச்சொல்

அ) இல் ☐ ஆ) இலக்கியா ☐

இ) சால ☐ ஈ) சிறந்தவள் ☐

28. இலக்கிய வகையால் சொற்கள் ________ வகைப்படும்.

அ) இரண்டு ☐ ஆ) நான்கு ☐

இ) ஆறு ☐ ஈ) ஏழு ☐

29. 'சங்கிலியனை மாற்றானிடம் காட்டிக் கொடுத்தவன்

அ) வருணகுலம் ☐ ஆ) காக்கைவன்னியன் ☐

இ) பிலிப் டி ஒலிவேரா ☐ ஈ) தோமசு வான்றி ☐

30. புலவர் தூதுவிட்ட பறவைகள்

அ) கொக்குகள் ☐ ஆ) நாரைகள் ☐

இ) கிளிகள் ☐ ஈ) புறாக்கள் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

பாண்டியமன்னர்கள் தமிழ்மொழியின் மீது கொண்ட பற்றின் காரணமாக கழகங்களை அமைத்தார்கள். கழகங்கள் இருந்தமைக்கு பண்டைய இலக்கியங்கள், மன்னர்களின் கல்வெட்டுகள் என்பன சான்றாக உள்ளன. முதற்கழகம் தென்மதுரையில் இருந்தது. இங்கு அகத்தியர் எழுதிய அகத்தியம் என்னும் நூல் அரங்கேற்றப்பட்டது. கடற்கோளால் தென்மதுரையும் முதற்கழகமும் அழிந்தன. இடைக்கழகம் கபாடபுரம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டது. பாண்டியமன்னன் கடுங்கோன் என்பவன் இடைக்கழகத்தை உருவாக்கினான். இடைக்கழகக் காலத்தில் எழுந்த நூல்களில் தொல்காப்பியம் மட்டுமே எமக்குக் கிடைத்தது. மீண்டும் கி.மு.1500 காலப்பகுதியில் ஏற்பட்ட கடற்கோளால் இரண்டாம் தமிழ்க்கழகத்தையும் அக்கால இலக்கியங்களையும் இழக்க நேரிட்டது. முடத்திடுமாறன் பாண்டியமன்னன் கடைக்கழகத்தை மதுரையில் உருவாக்கினான். கடைக்கழகத்தில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டது.

1. கழகங்கள் இருந்தமைக்கான சான்றுகள் எவை?

______________________________

______________________________

2. அகத்தியர் எழுதிய நூலின் பெயர் என்ன?

______________________________

3. இடைக்கழகத்தை உருவாக்கிய மன்னன் யார்?

______________________________

______________________________

4. எக்கழக காலத்தில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டது?

______________________________

______________________________

5. முதல் இரு கழகங்கள் அழிந்தமைக்கான காரணம் யாது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தனிநாயகம் அடிகளாரால் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடத்தப்பட்ட இடங்களின் பெயர்கள் இரண்டினைத் தருக.

2. சங்கிலி மன்னன் யாரை எதிர்த்துப் போராடினான்?

3. பெருங்கற்கால மக்களின் தொழில்கள் இரண்டு தருக.

4. ஆனைவிழுந்தான் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள் எச்சிற்பங்களை ஒத்தவை எனக் கூறப்படுகிறது.

5. மீனவர் எதைக் கொண்டு காலமறிந்து கடலோடுகின்றனர்?

6. தாயின் தாலாட்டு என்ற பாடலில் வீரமகன் எதை மீட்கும் போரில் வீரச்சாவடைந்தான்.

7. ''நீயும் நின் மனைவியும் தென்திசைக் குமரியாடி வடதிசைக் கேகுவீராயின்'' என்ற கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## துணிவே துணை

| | | | | |
|---|---|---|---|---|
| மாறாதே | உனக்கு | துணை | இல்லை | வெற்றியின் |

தோல்விகளைக் கண்டு துவளாதே!
தோல்வியே ________________ படிக்கல்
தோல்வி என ஒன்று கிடையாதே!
துயர் ________________ வேண்டாமே!

வெற்றி வாழ்க்கையை மாற்றுதே
வெற்றியின் களிப்பில் நீ ________________ !
அளவால் வெற்றி வேறுபடலாம்
அடைந்த வெற்றி மாறாதே!

துணிவே ________________ இதை மறவாதே!
துணிந்தால் துன்பம் மறைகின்றதே!
துன்பம் என்றும் ________________ - இதை
அறிந்தால் என்றும் வெற்றிதான்

புள்ளிகள் 10



TEDC

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. உருபுகள் ஏற்காத வேற்றுமைகள் எவை?

2. தளிர் அன்ன கை என்ற உவமை அணியின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை ஆகியவற்றை எழுதுக.

உவமானம் _____

உவமேயம் _____

பொதுத்தன்மை _____

3. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

ஒலி _____

ஒளி _____

4. பின்வரும் சொற்களின் பகுதி, இடைநிலை, விகுதி என்பவற்றை எழுதுக.

| | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| ஓடுகின்றன | | | |
| வந்தனர் | | | |

5. 1. மாறுபடுபுணர்ச்சி எத்தனை வகைப்படும்? _____

2. அவற்றில் இரண்டுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக?

புள்ளிகள் 15

## 6) மிகப் பொருத்தமான சொல்லை கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. நல்லவராய் ________________ நன்றென்று எண்ணுவோம்.

   ( வாழ்வதே, வாள்வதே )

2. சிங்கள அரசினால் வீசப்பட்ட ________________ பல்லாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

   ( எரிகுண்டினால், எரிகுன்டினால் )

3. பண்டாரவன்னியனது போர் ________________ எண்ணி ஆங்கிலேயப்படை திகைத்தது.

   ( வழிமையை, வலிமையை )

4. பாவாணர், தமிழ் உலகமொழி யாவற்றிலும் பரவி இருப்பதைச் ________________ சுட்டிக்காட்டினார்.

   ( சான்றுகளோடு, சான்றுகலோடு )

5. ஒலிவட்டிலுள்ள ________________ க் கேட்போம்.

   ( உரையாடலை, உறையாடலை )

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- மீண்டும் தொடக்கும் மிடுக்கு
- புலவரும் வறுமையும்
- பொழுதுபோக்கு
  - பொழுதுபோக்கு என்றால் என்ன?
  - பயன்தரும் பொழுதுபோக்குகள்
  - பொழுதுபோக்கினால் ஏற்படும் நன்மைகள்
  - நீர் விரும்பும் பொழுதுபோக்கு எது? ஏன்?

புள்ளிகள் 20